**ஹபராதுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 13 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஹபராதுவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடக் கணக்கில் மீதி ரூபா 1,661,158 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊழியர் பிணை வைப்புகள் மற்றும் ஊழியர் பிணை வைப்பு முதலீடுகள் ரூபா 142,335 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை வருமானம் ரூபா 179,400 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 5,471,848 தொகைக்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 09 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 10,594,070 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணப்படும் சமமின்மைகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 601,430 தொகைக்கான தொங்கல் கணக்கு வரவு மீதியை இனங்கண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கிற்கு தாக்கத்தை ஏற்படுத்திய காரணத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(i) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 2000 ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை காலப்பகுதி முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 1,733,820 தொகைக்கான பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்குகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வேன். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 8,823,727 தொகைக்கான செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வேன். |

**(உ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 122,982,754 தொகைக்கான 14 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 217 | -- | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ் 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் விதிகளின் பிரகாரம் செயற்பட்டு சரிசெய்வேன் |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 261(3) | 304,550 | 2018 திசெம்பர் 01 திகதியில் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் வங்கி மேலதிகப் பற்று ஒன்று ஏற்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வேண்டும். | |
| | (ii) நிதிப் பிரமாணம் 396(ஈ) | 29,424 | பொதுக் கணக்கில் வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலம் முடிவடைந்துள்ள 14 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |
| | (iii) நிதிப்பிரமாணம் 571(1)(2) | 106,536,622 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள 72 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2015 ஜூலை 10 ஆந் திகதிய 2/2015 இலக்கங் கொண்ட திறைசேரிச் செயாளரின் மற்றும் நிதி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை | -- | சபைக்குச் சொந்தமான 07 சிதைவடைந்த வாகனங்களை சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திரு க்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 15,038,060 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 223,262 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

**நிர்மாண வேலைக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஜூலை 18 ஆந் திகதி வைப்புச் செய்த போதிலும் தேறியிருக்காத ரூபா 96,265 இற்கான காசோலைக்கு உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வேன். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 4,071,700 | 3,755,197 | 3,097,984 | 7,977,027 | 3,814,100 | 3,673,913 | 3,271,780 | 7,319,814 |
| வாடகை | 26,840,000 | 20,886,239 | 7,935,649 | 24,204,627 | 2,973,677 | 1,243,410 | 1,285,000 | 11,254,027 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 7,824,850 | 432,850 | 431,650 | 52,200 | 5,073,250 | 382,500 | 363,100 | 51,000 |
| ஏனைய வருமானங்கள் | 154,325,450 | 110,718,990 | 18,217,230 | 121,026,958 | 97,411,950 | 19,476,941 | 14,200,000 | 28,525,198 |
| | 193,062,000 | 135,793,276 | 29,682,503 | 153,260,812 | 109,272,977 | 24,776,764 | 19,119,880 | 47,150,039 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 182,943,315 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 29,682,503 தொகை காணப்பட்டதால் வருமான அறவீடு 16 சதவீதமாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய வீதவரி மற்றும் வரியின் வருமானம் ரூபா 11,075,011 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,097,984 தொகையாகக் காணப்பட்டமையால், வீதவரி மற்றும் வரி வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் 28 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது, | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 32,140,266 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 7,935,640 தொகை ஆகக் காணப்பட்டமையால் வருமானம் அறவீடு 25 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 139,244,188 தொகை யான மொத்த வருமானத்தில் ஆண்டின் போது அறவிடப்பட்டது ரூபா 18,217,229 தொகை எனப்படும் 13 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் அறவீடு செய்வேன். |

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,262,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 109,456,990 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளில் இருந்து சேதனப் பசளை தயாரித்தல் மற்றும் மீள்சுழற்சிக்காக பயன்படுத்தி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், காணி ஒன்றில் அகற்றப்படும் குப்பைகளை மண் போட்டு மூடுவதற்காக 2018 ஆண்டில் ஒக்தோபர் மாதம் அளவில் சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,181,780 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சபையினால் குப்பைகளை அகற்றுவதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | குப்பைகளை அகற்றுவதற்காக முறையான மற்றும் நீண்ட கால வேலைத் திட்டம் ஒன்று தாயரிக்கப்பட வேண்டும். | அரச காணி ஒன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நீண்ட கால வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **வருமானம் அறவீடு செய்யாமை**<br>சபைக்குச் சொந்தமான அஹங்கம பொது வர்த்தக தொடர் கட்டிடத்தில் 78 கடைகள் வாடகைக்கு கொடுக்கப் பட்டிருந்ததுடன், அந்த வாடகையாளர் களிடம் ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 22,914,800 தொகை 2018 திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முறையான அங்கீகாரத்தை பெற்று நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப் பட்டிருந்த 22 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்க வில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது விண்ணப் பங்கள் கோரப்பட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இற்கு இணங்காமல் சேர்க்கப்பட்டிருந்த 09 பிரதியீட்டு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் படியாக 2018 ஆண்டின் போது ரூபா 2,963,118 தொகை செலவிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நி.பி. 71 இன் கீழ் எதிர்காலத்தில் முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | சபையில் தொழிலாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் 10 பேர் அவர்களுக்குரிய நிரந்தர கடமைப் பதவியில் சேராத முகாமைத்துவ உதவி சேவையின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | நிரந்தர கடமைகள் சாட்டப்பட வேண்டும். | பதவியணி குறைவாக இருந்தமையால் நிர்வாக வசதிக்காக தற்காலிக செயற் பாடாக போடப்பட்டு ள்ளது. எதிர்காலத்தில் சரிசெய்வேன். |

**3.4 ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, ஓய்வுபெற்றுள்ள, சேவையை வரிதாக்கிய 19 ஊழியர்களிடம் 2009 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் ரூபா 1,286,082 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.5 முகாமைத்துவத் திறமையின்மை**

**3.5.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2015 ஜூலை 10 திகதிய இலக்கம் 02/2015 கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 10 வாகனங்கள் 2004 ஆண்டு முதல் அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பல்வேறு இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்று சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 06 செலவு விடயங்களில் ரூபா 76,259,251 தொகைக்கான நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அவை 32 சதவீதத்திற்கும் 94 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக இலக்கு செலவுகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) செலவு விடயம் ஒன்றில் பிரதிகூலமான முரண் ரூபா 7,923,012 தொகை அதாவது 114 சதவீதம் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக இலக்கு செலவுகளை நெருங்கு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரியவாறு குழுக்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |